2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முனைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. 2019-ன் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான முக்கிய நிகழ்வினை அமைப்பதற்கு நிகழ்ச்சி பங்குதாரராக திருவாளர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பை (CII) தேர்வு செய்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையின் 30-8-2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 289-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. சென்னையில், அரசு-தனியார் பங்களிப்பில் கழிவிலிருந்து எரிசக்தி தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு தொழில்நுட்ப உதவி மற்றும் திறம்பட்ட ஆலோசனை சேவைகள் வழங்க பன்னாட்டு நிதி கழகத்தின்

சேவைகளைப் பயன்படுத்துவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையின் 24-9-2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 318-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

54. 2017-2018 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

55. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

56. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

57. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

58. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்

2019 பிப்ரவரி 14]

1/1956) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

59. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

60. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [*2012* ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/2012*) *52*(*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

61. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [*2012* ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/2012*) *37*(*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

62. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி *1* மற்றும் *2*) (ஆங்கிலம்) மற்றும் நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு. (இந்திய அரசமைப்புச் சட்டம் *151*(*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

76. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ்-ஆங்கிலம்)

———